Available online at www.jilile.in ISSN: 3048-4952
JOURNAL OF INDIAN LANGUAGES
AND INDIAN LITERATURE IN ENGLISH
*Journal of Indian languages and Indian literature in English*, 03(02), 201-209; 2025

# கல்வராயன் மலையில் வசிக்கும் மலையாளி பழங்குடி மக்களின் வாழ்வியல் சடங்குகள்

**சு. அகஸ்டியா, முனைவர் பட்ட ஆய்வாளர், மொழியியல் துறை,**
**பாரதியார் பல்கலைக்கழகம்,கோயம்புத்தூர்**
*agastiya14062002@gmail.com, 9940707946*
**முனைவர்ப. சங்கர்கணேஷ், உதவிப்பேராசிரியர், மொழியியல்துறை**
**பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்**
sankarganeshbu@gmail.com, **9095509152**

Submission Date:19.03.2025
Acceptance Date:24.03.2025

## கட்டுரைச் சுருக்கம்

சமூகம் என்பது மக்களின் வாழ்வியலையே அடிப்படையாகக் கொண்டது. மொழியும் , பண்பாடும் ஒன்றோடு ஒன்று பிண்ணிப்பிணைந்தது. பல இனக்குழுக்களாக நாடோடியாகவும் இருப்பிடமில்லாமலும் அங்கீகாரமில்லாமலும் வாழ்ந்த பழங்குடிகள் இன்று பல மேம்பாடுகளை அடைந்துள்ளனர் என்றால் அது மிகையாகாது. பாரம்பரியமாக தங்கள் இனங்களுக்கு உள்ளேயே பல பண்பாடுகளைப் பின்பற்றி வந்த மக்கள் இன்றைய நவீன காலக்கட்டத்தில் தங்களது மொழியிலும், பண்பாடுகளிலும் சில மாற்றம் அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் 37 பழங்குடிகள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இன்றளவும் சில பழங்குடி மக்கள் தங்கள் பண்பாட்டை தக்கவைத்துள்ளனர். அதனடிப்படையில் கல்வராயன் மலையில் வசிக்கும் மலையாளி பழங்குடி மக்களின் பாரம்பரிய சடங்குகளை எவ்வாறு மேற்கொள்கின்றனர் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## கட்டுரை நோக்கம்

கல்வராயன் மலையில் வசிக்கும் மலையாளி பழங்குடி மக்களின் மரபுச்சார் சடங்குகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## கல்வராயன் மலை

கல்ராயன் மலை தமிழ்நாட்டின் சேலம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ளது. சேலம் மாவட்டத்தில் உள்ள எல்லைகளைக் கல்ராயன் மலை என்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள எல்லைகளைக் கல்வராயன் மலை என்றும் அழைக்கப்படுகிறது. இம்மலைகள் கிழக்குத் தொடர்ச்சி மலைத்தொடரின் ஒரு பகுதியாகும். பச்சைமலை, ஜவ்வாதுமலை, சேர்வராயன்மலை ஆகியவற்றுடன் இவை காவிரி ஆற்று வடிநிலதைப் பாலாற்றின் வடிநிலத்திலிருந்து பிரிக்கும்எல்லையாக அமைந்துள்ளது.1,095 சதுர கிமீ பரப்பளவுள்ள இம்மலைகளின் உயரம் 2,000 முதல்3,000 அடி வரை உள்ளது.

வரலாற்றுக் காலம் தொடங்கி மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், மலையமான் மன்னர்கள், விஜயநகர பேரரசு, நவீன காலம் வரை கல்வராயன் மலையானது பல்வேறு நபர்களின் ஆளுகைக்குட்பட்டு வந்ததை சான்றுகள் மூலம் அறிகிறோம்.

### மலையாளி பெயர்காரணம்

மலையாளிகள் என்பது வடக்கு தமிழ்நாட்டின் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் ஒரு பழங்குடி குழுவாகும். இந்தப் பெயர் மலை-ஆலம் என்பதிலிருந்து பெறப்பட்டது, அதாவது "மலைப்பகுதி", மலைகளில் வசிப்பவர்களைக் குறிக்கிறது. அவர்கள் தமிழ்நாட்டின் மிகப்பெரிய பட்டியலிடப்பட்ட பழங்குடியினர், சுமார் 3,58,000 மக்கள் தொகை கொண்டவர்கள்.

மலையாளி என்ற சொல் மலைகளில் வாழ்பவன் எனப் பொருள்படும். மலையை ஆள்பவர் என்ற பொருளிலும் மலையாளி என்ற சொல் வழங்கப்படுகிறது. கேரளாவிலுள்ள மலையாளி மக்களுக்கும் இவர்களுக்கும் யாதொரு தொடர்புமில்லை. இம்மக்கள் சமவெளிப் பகுதிகளிலிருந்து மலைகளில் குடியேறியவர்களாவர்.

அவர்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்:

1. சேர்வராயர்களில் வசிக்கும் பெரிய மலையாளிகள் ("பெரிய" மலையாளிகள்),
2. பச்சைமலைகளில் வசிக்கும் நாடு மலையாளிகள் ("நடுத்தர" மலையாளிகள்), மற்றும்
3. கொல்லைமலைகளில் வசிக்கும் சின்ன மலையாளிகள் ("சிறிய" மலையாளிகள்).

### காராளர் பெயர்காரணம் :

1891 கணக்கெடுப்பு அறிக்கையில் காராளர் (மேகத்தை ஆள்பவர்கள்) சேலம் தென்னார்க்காடு மாவட்டம் மலைப்பகுதிகளில் வேட்டையாடியும் பயிர்த்தொழிலில் ஈடுபட்டும் வாழ்பவர்களாக பதியப்பட்டுள்ளது. 1901 கணக்கெடுப்பு அறிக்கையில் மலபாரில் வேளாளருக்கு உரிய மற்றுமொரு பெயராகவும் பதியப்பட்டுள்ளது. 1901 கணக்கெடுப்பில் சேலம் மாவட்டம் சேர்வராயன் மலையினைச் சேர்ந்த மலையாளிகள் தங்களை வேளாளர் எனவும் காராளர் எனவும் பதிந்துள்ளனர். அவர்கள் தந்துள்ள உட்பிரிவுகளின் பெயர்களான கொல்லி, பச்சை, பெரிய, போன்றவை மலைகளோடும் மலையாளிகளோடும் தொடர்பு படுத்துகின்றனர்.

தமிழ்நாட்டில் கள்ளக்குறிச்சி மாவட்ட கல்வராயன் மலையில் வாழும் காராளர் மலையாளப் பழங்குடி மக்கள் காஞ்சிபுரத்திலிருந்து இடம்பெயர்ந்த வீரர்கள் என்று கூறப்படுகிறது. இவர்கள் “காராளர்” இனமக்கள் வேடர் என அழைக்கப்படும் பழங்குடி மக்களுடன் போரிட்டு அடக்கியும், கொன்றும் அவர்களோடு சேர்ந்து வாழ முற்பட்டு அவர்களின் பெண்களையும் மணந்தார்கள். வேடர் காராளர்களோடு போராடிப் பின்னர் ஒன்றாகி வாழ்ந்த நிகழ்சிகளைப் பற்றி மலையாளிகள் (காராளர்கள்) தங்கள் திருமணச்சடங்கில் சொல்லப்படும் வார்த்தைகளால் அறியலாம்.

தற்போது காராளர் மற்றும் வேடர் சமூகங்கள் “மலையாளி” என்று அழைக்கப்படுகின்றனர். இம்மலையாளிகள் காஞ்சிபுரத்திலிருந்து வந்ததால் தங்களைக் காஞ்சிபுரத்து வேளாளர் என்றும் கொங்குநாட்டு வேளாளர்கள் என்றும் கூறுகின்றனர். காராளர் என்ற பெயரே இவர்கள் முதன்மையான

பெயராகக் கொள்கின்றனர். கவுண்டர் என்னும் பெயரை இரண்டாவதாக உள்ளது. கண்டர் சிறந்த வீரர்களாகத் திகழ்ந்த அரசர்கள் என்பது தெரிகிறது. கண்டன் என்பதற்கு கவுரியர், காமுண்டன், காமிண்டன் என்றும் பலபெயர்கள் இருந்ததை இலக்கியங்கள் மூலம் அறியலாம். காமிண்டன் என்பவரே கவுண்டன் என்று கூறப்படுகிறார் எனலாம்.

## கல்வராயன்மலை மலையாளி (காராளர்) பழங்குடிகள்

கல்வராயன் மலையில் பல்லாயிரம் ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்தமைக்கான தொல்லியல் சான்றுகள் காணப்படுகின்றன. மக்கள் வரலாற்றை ஆராய்கையில் இம்மக்களின் முன்னோடிகள் அரசர்களாகவும், அரச இனத்தவர்களாகவும், அரசனின் போர்வீரர்களாகவும், எல்லைக் காவல்காரர்களாகவும் இருந்துள்ளார்கள் என்பதை நம்மால் அறியமுடிகின்றது. இம்மலையானது பல்வேறு பழங்குடிகளை உள்ளடக்கியது. அவற்றுள் காராளப் பழங்குடியானது மலைவேளாளர், மலையாளக் கவுண்டர் எனக் குறிப்பிடப்படுவதுண்டு. வட தமிழ்நாட்டில் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் வாழுகின்ற இவர்கள் காராள வேளாளர், கொங்கு வேளாளர் எனவும் அழைக்கபடுகின்றனர். மேலும், இவர்களை மலைகளில் குடியேறியுள்ளதால், மலைகளை ஆள்பவர் என்றும்கருதுவதுண்டு.

## பெயர் சூட்டும் சடங்கு

பிறந்த குழந்தைக்குப் பெயர் சூட்டும் நிகழ்வு மாலை நேரத்தில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் தாய்மாமன் முக்கியமானவராகக் கருதப்படுகிறார். மேலும் இதில் ஐந்து பெண்கள் கலந்துகொண்டு குழந்தைக்குப் பெயர் சுட்டுவர். இச்சடங்கானது குழந்தை பிறந்து ஒன்பதாம் நாள் அல்லது பதினைந்தாம் நாள் போன்ற ஒற்றைப்படை நாட்களில் நிகழ்த்தப்பெறும். பெயர் சூட்டிய பின் குழந்தைக்கு சாதத்துடன் பருப்பும், நெய்யும் கலந்து உணவினை இவர்கள் ஊட்டுவர். முந்தைய காலங்களில் குழந்தைக்குத் தங்களின் குலதெய்வங்களின் பெயர்களையே சூட்டுவர். (கருப்பையா,மாரியம்மாள், ஆண்டி, ராமர், சோலையம்மாள்.....) தற்பொழுது அவ்வாறு இல்லாமல் கால மாற்றங்கள் நாகரீகத்திற்கு ஏற்றவாறு பெயர்களைச் சூட்டுகின்றனர்.

## பூப்படைதல்

பெண்கள் பூப்படைந்த நாளன்று நீராடி புது ஆடை அணிவிப்பர். அப்பெண்கள் பூப்படைந்தபோது அணிந்திருந்த ஆடையை எரித்து விடுவர். பின்பு மூன்றாம் நாள் தாய்மாமன் தன் உறவினர்களுடன் வந்து அப்பெண்ணை மஞ்சள் நீராட்டி அவர்கள் கொண்டு வந்த புத்தாடையை அணியச் செய்வர். தாய்மாமன் தென்னை ஓலையால் ஒரு குடிசை போன்று கட்டி அதில் பெண்ணை இருக்கச்செய்வர். அவ்விடத்தில் அருவா, ஆணி, அடுப்புக்கரி, வேப்பிலை போன்றவற்றை அருகில் வைத்திருப்பார். இந்நாட்களில் கேழ்வரகு, கம்பு, திணை போன்றவைகளுடன் வெல்லம் கலந்து கொடுப்பர்.

உணவுக்காக பச்சரிசியும், மொச்சையும் கொண்ட ஒரு கலவை சாதம் கொடுக்கப்படுகிறது. பின்பு ஒன்பதாம் நாள் கணியானை வரவழைத்து வீட்டில் புனித நீர் தெளித்து உலக்கையை வீட்டின் முன் வைத்து பூப்படைந்த பெண் அதைத் தாண்டி உள்ளே செல்லும் முன் அவள் இருந்த தென்னை ஓலையால்

செய்யப்பட்ட குடிலை எரித்துவிடுவார். இவ்வாறு செய்த பின்பே அவர்களின் தீட்டு கழிந்ததாக அவர்கள் நம்புகின்றனர்.

## திருமணச் சடங்கு

காராளர் இன மக்களின் திருமண முறையானது பல சடங்குகளாலும் நம்பிக்கைகளாலும் நிகழ்த்தப்படுகிறது. காராளர் இன மக்களிடம் பல்வேறு வகையான குலங்கள் உண்டு.அக்குலங்களில் இருந்தே திருமணத்திற்கு பெண் எடுப்பர். இவையல்லாமல் வேறு ஊர்களில் தங்கள் இனத்துக்குள் குலங்கள் பார்க்காமல் பெண் பிடித்திருந்தால் அப்பெண்ணைத் திருமணம் செய்துக் கொள்வார்கள்.

காராளர் இன மக்களிடம் உள்ள இருபத்தாறு குலங்களில் பதின்மூன்று குலங்களில் மாமன் மைத்துனனாகவும் 13 குலங்களில் பங்காளிகளாகவும் (அண்ணன் தம்பி) இருப்பதில் முதல் பதின்மூன்று குலங்களிலிருந்து பெண் எடுப்பார், இவையல்லாமல் வேறு ஊர்களில் தங்கள் இனத்துக்குள் குலங்கள் பார்க்கா மல் பெண் பிடித்திருந்தால் அப்பெண்ணைத் திருமணம் செய்துக் கொள்வார்கள்.

நிச்சயம் செய்வதற்கு ஒரு மாதம் முன்பு மாப்பிள்ளை வீட்டார் பெண் பார்க்கச் செல்வர் பின்பு பெண் வீட்டார் சம்மதம் தெரிவித்ததுடன் மாப்பிள்ளை விட்டார்கள் 100 பேருக்கு மேல் அழைத்துச் சென்று நிச்சயதார்த்தம் செய்வர். நிச்சயதார்த்தம் பெண் வீட்டில் நடத்தப்பட்டு "கண்டசாரம்" என்ற வெள்ளியால் செய்யப்பட்ட சங்கிலியை அணிவர்.

பெண்வீட்டு கண்டசாரத்தை மாப்பிள்ளை பொண்ணுக்கும் மாப்பிள்ளை வீட்டுக் கண்டசாரத்தை பெண் மாப்பிள்ளைக்கும் அணிவிப்பர். இந்நாளிலேயே அவர்களுக்கு நலுங்கு வைக்கும் நிகழ்வு நடைபெறும். நிச்சயம் செய்யப்பட்டு ஏழு நாட்களுக்குள் திருமணம் நடைபெறும். இந்த ஏழு நாட்களிலும் அவரவர் வசதிக்கேற்ப நலுங்கு நடத்துவர்.

## பெண் அழைப்பு (மூச்சி மூப்பது)

பெண் அழைக்க விடியற்காலையில் மாப்பிள்ளை மற்றும் அவர்களின் நண்பர்கள் சென்று அழைத்து வருவர். மாப்பிள்ளை அழைக்கும் போது தோல் பட்டையின் மேல் ஒரு வாள் போல் வடிவமுடைய "சமத்தாடு" என்ற ஒன்றைப் பயன்படுத்துகின்றனர். இதனுடன் மட்டுமே மாப்பிள்ளை வீட்டார் பெண் அழைப்பிற்கு செல்வர்.

திருமணத்திற்கு முதல் நாள் இரவில் தொடங்கி அடுத்த நாள் காலை திருமணம் நடைபெறும் வரை பூஜையானது மந்திரம் ஓதப்பட்டு நடைபெறும்.அந்த மந்திரமானது கணியான் என்பவரால் ஓதப்படும். மந்திரம் கூறும் நேரத்தில் பெண் உரிமைக்காரர் மாப்பிள்ளை உரிமைக்காரர் (தாய்மாமன் போன்றோர்) மற்றும் கணியான் ஆகியோரது கைகள் போவல கூடையின் மேல் ஒன்றாக வைக்கப்பட்டு மந்திரம் ஓதப்படும். இப்போவலக்கூடையில் அதிரசம், பலகாரம் போன்றவற்றை வைத்திருப்பர்.

அப்போது அந்த நரவிளக்கானது ஏற்றப்படும். அந்த விளக்கு மண்ணால் செய்யப்பட்டது. அவ்விளக்கின் ஒரு பகுதியில் சோறும் எண்ணெயும் ஊற்றப்பட்டு ஒன்பது திரிகள்இடப்படும் அந்த நரவிளக்கானது அடுத்த நாள் இரவு வரை அணையாமல் எரிய வேண்டும் என அவர்கள் கூறினார். நரவிளக்கானது பூஜை செய்யும் இரவில் உரலின் மேல் வைக்கப்பட்டுஇருக்கும். திருமணத்தின் போது இவ்விளக்கினை மாப்பிள்ளையின் தாய் கையில் ஏந்தி இருப்பார்.

இந்தபூஜைசெய்யப்படும் இரவில் மணக்காரர் என்பவர் செம்மண்ணில் ஒரு மேடு போல் அமைத்து "வெள்ளேரி" மரம் ஒன்றை நட்டு வைத்து அதில் அரச இலை, புல், மூங்கில் குச்சி, மாங்கொத்து, துண்டு சேர்த்து மணக்காரர் கட்டுவார். மேலும் செம்மண் மேட்டில் மூன்று அளவிலான பானைகளை தண்ணீர் நிரப்பி வைத்து விடுவார். அந்தப் பானையை அவர்கள் "சால்கருவம்" என்று கூறுகின்றனர்.

அதனை இரவில் மாப்பிள்ளை மட்டும் வணங்க வேண்டும் என்பது இவர்களின் வழக்கமாக உள்ளது. காலையில் மணமக்கள் இருவரும் வணங்குவர். அடுத்த நாள் காலையில் வீட்டின் வாசற்பகுதியில் திருமணம் நடைபெறும். தாலியை முகூர்த்த புடவையின் மேல் ஏழு வெற்றிலை வைத்து அதன் நடுவில் அரச இலையின் மேல் தாலியை வைத்திருப்பர். அத்தாலியை கணியான் என்பவர் எடுத்துக் கொடுக்க மாப்பிள்ளை மணமகளுக்கு கட்டுவர்

அதற்குப்பின் மணமகளைக் குதிரையில் அமர வைத்து அவளுடைய தாய் மாமன் குடை பிடிக்க ஊர்வலமாகஅழைத்து வருவர். அவ்வாறு வரும்போது மணமகள் வீட்டில் இருந்து வரதட்சணை எடுத்து வருவார். அதற்குப்பின் மணமகன் மற்றும் மணமகள் இருவருக்கும் திருமணத்திற்கு வந்தவர்கள் பரிசுப் பொருட்களை அவர்களின் ஆடைகள் மீது ஊக்கின் மூலம் பணத்தைக் குத்துவர்.

இந்த மணமகன் மற்றும் மணப்பெண் இருவரையும் ஆரத்தி எடுப்பர். ஆரத்தி எடுக்கும் போது தர்பைப்புல் பயன்படுத்துவர். இவர்களின் வழக்கப்படி வீட்டிற்குள் நுழையும் இடத்தில் அம்மியை வைத்து மெட்டியை மணமகனின் தங்கை போடுவர். பின்பு மாப்பிள்ளை வீட்டில் இருந்து பெண் வீட்டிற்குச் செல்லும் போது பெண் வீட்டார் ஊர் எல்லையில் பாயும் சொம்பும் கொடுத்து அழைத்து வருவார். இவர்கள் ஆரத்தி எடுக்க பாலத்தட்டு என்ற ஒரு தட்டை பயன்படுத்துகின்றன.

பச்சரிசியை ஊறவைத்து அதில் வெல்லம் தேங்காய் போன்றவற்றை கலந்து வைத்திருப்பர். இதை மாப்பிள்ளை மூன்று முறை சாப்பிடுகிறார். மணப்பெண் மாப்பிள்ளை கையை கழுவி விடுகிறார். அனைவருக்கும் பகிர்ந்து பங்கிட்டு தானும் உண்ணுகிறார். அப்பொழுது மணமகளும் அவரது பெண் தோழிகளும் வேடனை விட்டு காராளனை கைபிடித்தோம் என்று கூறுகிறார்கள்.

### பெண்ணின் கருக்காலம்

ஒரு காராளர் பெண் கருவுற்றால் அவள் எப்பொழுதும் போல் வீடு மற்றும் காடுகளில் உள்ள வேலைகளை அவளே செய்கிறாள். அவளது விருப்பத்திற்கேற்ப ருசிக்க பல்வேறு உணவு வகைகள், பறவைகள் மற்றும் விலங்குகள் போன்றவற்றை பரிசளித்தல் முதலான சிறப்புகள் அவளது கணவரால் வழங்கப்பட வேண்டும். சந்திர மாதங்களின் அடிப்படையில் அவர்கள் கருக்காலத்தைக் கணக்கிடுகிறார்கள். சில பெண்கள் முழு நிலவைக் குறிக்க ஒவ்வொரு மாதமும் ஒரு கூழாங்கல்லை பானையில் போட்டு பத்திரப்படுத்தி கணக்கு வைத்திருக்கிறார்கள். கருவுற்றப் பெண்ணின் உடல்நலம் ஒப்புக்கொள்கிறவரை தன்னிச்சையாகப் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப் பெறுகிறாள். மோசமான ஆவி பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடப்பதைத் த விர்க்கவும் அறிவுறுத்தப்படுகிறாள். ஒரு வாரத்திற்கு ஒரு முறை ராகி கஞ்சி, அரிசி பொருட்கள், காய்கறிகள் மற்றும் கீரைகுழம்பு அவளுக்கு வழங்கப்படுகின்றன. தன் பெற்றோர்கள் வீட்டில் பேறுகாலத்தைப் பெண் கழிக்கிறாள். அவளது பெற்றோருக்கு சிரமம் இருந்தால்

பிரசவ காலத்தில் கணவரின் பெற்றோர் கலந்து கொள்வார்கள். இதன் வழியாக பேறுகாலத்தில் இப்பெண்களுக்கு ஓய்வு என்பதே கிடையாது என்பது வெளிப்படுகிறது.

## இறப்புச் சடங்குகள்

இறந்தவர்களைப் புதைப்பது காராளர் இன மக்களின் வழக்கமாக உள்ளது. ஆனால் இவர்களின் மூத்த குழந்தையை மட்டும் எரிக்கின்றனர். ஏனெனில் அவர்கள் குழந்தையை புதைத்தால் மந்திரவாதிகள் அக்குழந்தையின் மண்டை ஓட்டை எடுத்து சூனியம் வைப்பதாகக் கருதுகின்றனர். இதனால் அவர்களின்



வம்சமே அழிந்துவிடும் என்று நம்புகின்றனர். இதனால் மூத்த குழந்தையை எரிக்கச் செய்கின்றனர். இதேபோல் இவர்களுக்கு என்று தனி மயானம் ஏதுமில்லை. பெரும்பாலான ஊர்களில் உள்ள ஆற்றங்கரையிலும், அவர்ரவர் நிலங்களிலும் புதைக்கின்றனர். புதைக்கும்போது அவர்களின் ஆடையில் பொத்தான் இருந்தால் அதனை நீக்கிவிட்டு புதைக்கின்றனர். அவர் பயன்படுத்திய அனைத்து ஆடையையும் அந்த குழிக்குள் இட்டு மண்ணால் மூடி விடுகின்றனர். ஐந்தாவது நாளன்று கல்லடித்து வைத்து, புதைத்த இடத்தில் படையலிட்டு அதன் பக்கத்தில் ஒரு தட்டு வைத்து, அதில் தண்ணீர் நிரப்பிவைப்பர். ஏனெனில் இறந்த ஆவி அந்தத் தண்ணீரைக் குடிக்கும் என்ற நம்பிக்கை அவர்களிடம் உள்ளது. அதேபோல் அவர்கள் புதைத்த இடத்தின்மேல் பகுதியில் தானியங்களைத் தூவிவிடுவர். இறந்தவர்களை அவர்களின் நிலத்தில் புதைப்பதால் வெளியில் இருந்து வருபவர்களுக்குத் தெரியாதது போல் அதன் மேல் செடியை நட்டுவைப்பர். இதுவே கர்ப்பிணி பெண்கள் இறந்தால் அவர்களின் வயிற்றில் இருந்து குழந்தையைத் தனியாக எடுத்து தாயையும், குழந்தையும் தனித்தனியாக புதைப்பர். அதேபோல் முதல் குழந்தையாக இருந்தால் எங்கு புதைக்கிறோம் என்பதைத் தெரியாதவாறு பார்த்துக் கொள்கின்றனர். காராளர் மக்கள் இறந்தவர்களை காலையில் இறந்தால் மாலையில் புதைத்து விடுவர். அதுவே மாலை வேளையில் இறந்தால் மறுநாள் காலையில் புதைத்து விடுவர். இவர்களிடமும் இறந்தவர்களைக் குளிப்பாட்டி, தலையில் அரப்பு வைக்கும் பழக்கம் கொண்டுள்ளனர்.

## இறை வழிபாடு

காராளர் மக்களின் இறைவழிபாடும் நம்பிக்கைகளும் வித்தியாசமாகதான் உள்ளது. அவர்கள் தங்கள் குலதெய்வமாக கரிய ராமர், இளைய ராமர், ஆண்டி, மாரியம்மன், காளி மற்றும் சோலையம்மாள் போன்ற தெய்வங்களை வணங்குகின்றனர். இவர்கள் வருடத்திற்கு ஒரு முறை மட்டும் திருவிழா நடத்தும் வழக்கம் கொண்டுள்ளனர். சித்திரை மாதத்தில் இவர்கள் முப்பூசை வழிபாடு செய்கின்றனர். இவர்கள் ஒரு குகையில் அவர்கள் வழிபடும் சாமியின் முழு உருவம் பார்ப்பதாக கூறுகிறார்கள். அந்த இடத்திற்க்கு செல்வதற்கு

முன்பு 40 நாட்கள் விரதம் இருந்தால் தான் குகைக்கோவிலுக்குச் செல்ல முடியும். அதுவும் ஆண்கள் மட்டுமே செல்லமுடியும்.



அவர்கள் குகையின் உள்ளே செல்லும் போது எந்த ஆடையும் அணியாமல் செல்ல வேண்டும். அப்படி சென்றவரிடம் அந்த குகையில் என்ன இருக்கிறது என்று கேட்டறிந்ததில் அவர்கள் கூறியது; அந்த குகைக்குள் சென்றதும் ஒரு சத்தம் வருகின்றது, அப்பொழுது ஒரு சிலையும் அச்சிலையில் சித்தர் போன்ற உருவமும் உள்ளது என்று தெரிவித்தனர்.

இவர்கள் அமாவாசை, பௌர்ணமி போன்ற நாட்களில் சாமி கும்பிட்டு படையல் போடும் பழக்கம் இல்லை என்று தெரிவிக்கின்றனர். இவர்கள் பொங்கல் பண்டிகையை மட்டும் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். கும்மியடித்து, பாட்டுப்பாடியும் கொண்டாடுகின்றனர். பிறகு வீட்டு சாமி என்ற வழிபாட்டு முறையின் மூலம் இவர்கள் முன்னோர்களில் இறந்தவர்கள் எத்தனை நபரோ அத்தனை நபருக்கும் ஒரே நாளில் படையல் வைக்கின்றனர். இவர்களிடம் தெவசம் என்ற ஒரு வழக்கம் இல்லை.

## முடிவுரை

காராள பழங்குடியினர் தங்களுக்கே உரித்தான கலாச்சாரம், சடங்குகள், உடை, நம்பிக்கைகள் மற்றும் வாழ்க்கை முறையைக் கொண்டிருக்கிறார்கள். மலையாளி பழங்குடி மக்கள் இன்றைய நவீன காலம் மாற்றத்தால் அவர்களது பண்பாடு மறைய தொடங்கியுள்ளது. சமவெளி மக்களின் தொடர்பால் சடங்குகள் பெரிதும் பாதிக்கப்பட்டு மாற்றத்திற்குள்ளாகி இருக்கின்றனர்.

## துணைநூற்பட்டியல்


முனைவர் க.ரத்னம் (2010) தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

கோ.கிருட்டினமூர்த்தி(1994)கல்வராயன் மலை மக்கள் (வரலாறு) சேகர் பதிப்பகம், சென்னை

முனைவர் கி.அய்யப்பன், (2014) கல்வராயன் மலையாளிகள் அன்றும் இன்றும், விசாலட்சுமி பதிப்பகம், நல்லாப்பாளையம்.

முனைவர் சி.நல்லதம்பி தமிழகப் பழங்குடி வழக்காற்றியல் கல்வராயன் மலைப் பழங்குடி மக்கள், புலம் வெளியீடு.

முனைவர் நா.தீபாராணி, கல்வராயன் மலைப் பழங்குடிகளின் இனவரைவியல, சுடர்மணி பதிப்பகம்.

## பின்னிணைப்பு புகைப்படங்கள்



*(பூப்படைதல் சடங்கு )*



**(**கண்டச்சாரம் - வெள்ளியால் ஆனது **)**



*(நலுங்கு வைத்தல்)*



*(சமத்தாடு )*



*(மந்திரம் ஓதப்படும் நிகழ்வு )*



*(நரவிளக்கு )*



*(சால்கருவம்)*



*(தாலி )*



*(குதிரையில் பெண் அழைத்து வரும் நிகழ்வு )*



*(தாலிக் கட்டும் நிகழ்வு)*



*(ஆரத்தி எடுக்கும் நிகழ்வு)*



*(மெட்டி போடும் நிகழ்வு )*